ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/20 - 2020 ඔක්තෝබර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.29

*2199/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (1) ஆம் உபபிரிவு மற்றும் 6 ஆம் பிரிவு மற்றும் 14 பிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 20 இன் மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் பின்வரும் ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்துகின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஒற்றோபர் 29.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்பட முடியும்.

2. 2018, யூன் 18 ஆந் திகதிய 2076/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2019, ஒற்றோபர் 03 ஆந் திகதிய 2143/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2019, திசெம்பர் 06ஆந் திகதிய 2152/63ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2020, மே 22 ஆந் திகதிய 2176/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2020, யூன் 30 ஆந் திகதிய 2182/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2020, ஓகத்து 17 ஆந் திகதிய 2189/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை என்பவற்றினால் திருத்தப்பட்டவாறான 2017, நவெம்பர் 09 ஆந் திகதிய

1A - PG 5212 — 520 (2020/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2189/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இல் நிரல் I மற்றும் நிரல் II இல் காணப்படும் இயைபு முறைத் தலைப்புகள் மற்றும் இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டதுடன் நிரல் III மற்றும் IV களில் அதற்கு நேரொத்த பதிவுகளில் காணப்படும் பின்வரும் பொருட்கள் சேர்க்கப்படுதல் வேண்டும் :

| | நிரல் I இயைபு முறைத் தலைப்புகள் | நிரல் II இயைபு முறைக் குறியீடுகள் | | நிரல் III விடயம் | நிரல் IV இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் (L) |
|---|---|---|---|---|---|
| **234** | **17.01** | | | **கரும்பு அல்லது பீட் சீனி மற்றும் இரசாயன தூய சுக்ரோஸ், திண்ம வடிவத்தில்.** | |
| | | | - | சுவையூட்டும் அல்லது நிறமூட்டல் பொருட்களைக் கொண்டிராத பதனிடப்படாத சீனி | |
| | | 1701.12.00 | -- | பீட் சீனி | L |
| | | 1701.13.00 | -- | இந்த அத்தியாயத்திற்கு துணை தலைப்புக் குறிப்பு 2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட கரும்பு சீனி | L |
| | | 1701.14.00 | -- | பிற கரும்பு சீனி | L |
| | | | - | மற்றவை: | |
| | | 1701.91.00 | -- | சுவையூட்டும் அல்லது நிறமூட்டல் பொருட்களைக் கொண்டுள்ளவை | |
| | | 1701.91.10 | --- | சீனி | L |
| | | 1701.91.90 | --- | மற்றவை | L |
| | | 1701.99.00 | -- | மற்றவை: | |
| | | 1701.99.10 | --- | வெள்ளைபடிக கரும்பு சீனி | L |
| | | 1701.99.20 | --- | வெள்ளைபடிக பீட் சீனி | L |
| | | 1701.99.30 | --- | வெள்ளைபடிக பீட் சர்க்கரை | L |
| | | 1701.99.90 | --- | மற்ற சீனி | L |
| | | | | | |

3. 2016, நவெம்பர்11 ஆந் திகதிய 1992/74ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2017, ஒற்றோபர் 02 ஆந் திகதிய 2039/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2019, திசெம்பர் 06 ஆந் திகதிய 2152/63ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2020, யூன் 30 ஆந் திகதிய 2182/10ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2020, ஓகத்து 17 ஆந் திகதிய 2189/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை என்பவற்றினால் திருத்தப்பட்டவாறான 2016, பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணங்களின் அட்டவணை I இல் பின்வரும் பொருட்கள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணங்கள் சேர்க்கப்படுதல் வேண்டும்:

| தொடர் இல. | விடயம் | இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம் |
|---|---|---|
| 59 | சீனி | சீஜஎப் பெறுமதியில் 0.4 % |
| | | |

4. இந்த ஒழுங்குவிதிகள் 2020 ஒற்றோபர் 30 முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.